வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| | | |
|---|---|---|
| juk;:- 13(2018) | Gtpapay;- I | Neuk;:- 2.00 kzpj;jpahyk; |

**அறிவுறுத்தல்கள் :-**

- **இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.**
- **பகுதி I, 30 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.**
  **பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.**
- **பகுதி I மற்றும் பகுதி II ஆகியவற்றிற்குரிய இரண்டு விடைத்தாள்களும் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்.**

### பகுதி - I

❖ **ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01) இலங்கையின் 1 : 50,000 இடவிளக்கப்படம் ஒன்றில் இனங்காணக்கூடிய மூன்று பண்பாட்டம்சங்களைத் தரும் விடை எது?
1) வெளியரும்புப் பாறை, திருகோண கணித நிலையம், நதி
2) அமைக்கப்பட்ட பிரதேசம், குடியிருப்புக்கள், நெல்வயல்.
3) பிரதான வீதி, பாடசாலை, மியாந்தர் வளைவு.
4) இறப்பர், சேனைப்பயிர்ச்செய்கை, காடு.
5) குளம், நதி, கைவிடப்பட்ட கால்வாய். ( )

02) 1 : 50,000 இடவிளக்கப்படமொன்றில் 15 *cm* ஆல் காட்டப்படும் சிறுவீதியொன்றின் உண்மையான நீளத்தினை *km* தரும் விடையைத் தெரிவு செய்க.
1) 5km 2) 6.5km 3) 7 km 4) 7.5km 5) 8km ( )

03) நாடொன்றிலிருந்து இடம் பெயர்ந்து செல்லும் மக்களின் எண்ணிக்கையையும், அவர்கள் பயணம் செய்யும் திசையினையும் எடுத்துக் காட்டுவதற்கு மிகவும் பொருத்தமான படைவரை கலையியல் முறையைத் தெரிவு செய்க.
1) பாய்ச்சல் கோட்டு வரைபடம் 2) கூம்பக பார்
3) இரட்டை பார் 4) கோட்டு நிரல் வரைபடம்
5) கூட்டு பார். ( )

04) 2000 – 2016 வரையான காலப்பகுதிக்குரிய இலங்கையின் அரிசி உற்பத்தியையும், இறக்குமதிகளையும் ஒன்றாகக் காட்டுவதற்கு மிகவும் பொருத்தமான வரைபினைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிக.
1) சாதாரண பார் 2) மீடிறன் பல்கோணி
3) இரட்டை பார் 4) கூம்பக பார்
5) பாய்ச்சல் கோட்டு வரைபு ( )

agaram.lk

05) தரவுத் தொகுதியொன்றின் மையப் போக்கினை எடுத்துக் காட்டுவது.
1) மேற்காலணை 2) கீழ்க்காலணை 3) வீச்சு
4) இடையம் 5) ஆகாரம் ( )

06) நவீன தொழில்நுட்பங்களின் விருத்தி காரணமாக பௌதிக, மானிட தரைத்தோற்ற இடம்சார் பரவல் கோலத்தை எடுத்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் படம்.
1) இடவிளக்கப்படம் 2) கருப்பொருள் படம் 3) எண்ணிலக்கப்படம்
4) தேசிய தேசப்படம் 5) புவியின் தரைத்தோற்றப் படங்கள் ( )

07) புவியியல் தரவுகளை எண்ணிலக்க முறையாக மாற்றி கணணிக்கு உள்ளீடு செய்யும் போது பயன்படுத்தப்படுகின்ற உள்ளீடு மூலகங்களுள் ஒன்று.
1) தரவு 2) பயனிகள் 3) திரை
4) அச்சு உபகரணம் 5) வருடிகள் ( )

08) இடம்சாரா தரவு / பண்பு சார் தரவுகளில் உள்ளடக்கப்படும் விடயங்களில் ஒன்று.
1) நாட்டின் அமைவு 2) நாட்டின் நதிகள் 3) நகரங்கள்
4) உலக சனத்தொகை அளவு 5) பயிர்ச்செய்கை ( )

09) சமகணியப் படங்களின் மூலம் வரைந்து காட்டப்படும் இரண்டு புவியியல் அம்சங்கள்.
1) நில உயரம், மழைவீழ்ச்சி 2) மண்வகைகள், நெல் வயல்கள்
3) வடிகால் பாங்கு, வீதிகளின் போக்கு 4) குடித்தொகை அடர்த்தி, நிலப்பயன்பாடு.
5) குடித்தொகைப் பரம்பல், மண் வகைகள் ( )

10) புவியியல் தகவல் முறைமை (GIS) ஒன்றில் பயன்படுத்தப்படும் பிரதான தரவு வகைகள் இரண்டு,
1) தொடர்ச்சியான பின்னகத் தரவுகள்
2) பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை, தொலையுணர்வுத் தரவுகள்
3) பெயரளவு, வரிசைநிலைத்தரவுகள்
4) லான்ட் சட் படிமங்கள், கூகிள் தரவுகள்
5) இடம்சார், இடம்சாராத தரவுகள் ( )

11) பாலைவனப் பிரதேசங்களில் நீரினால் உருவாக்கப்படும் இரண்டு நிலவுருவங்களைத் தரும் விடையைப் பின்வருவனவற்றிலிருந்து தெரிக.
1) பஜாடா, சரிவுச் சமதளம் 2) பீடைக்கிடைத் திணிவு, யாடாங்கு
3) பார்க்கன், நுண்மண் படிவுகள் 4) பனியெருத்தேரி, கழிமுகம்
5) வெள்ளச்சமவெளிகள், சரிவுச் சமதளம். ( )

12) வளிமண்டல கட்டமைப்பில் மிகக்குறைந்தளவில் காணப்படும் வாயுக்கள்.
1) நைதரசன், ஒட்சிசன், காபனீரொட்சைட் 2) நைதரசன், ஆகன், ஹீலியம்.
3) ஒட்சிசன், ஓசோன், கிரிப்தன் 4) நியோன், மெதேன், கிரிப்தன்
5) ஒட்சிசன், நியோன், நைதரசன் ( )

13) தரைக்கீழ் நீரரிப்பினால் உருவாகும் நிலவுருவம்.
1) படிவுத்திட்டை 2) பஜாடா 3) வாடிகள்
4) உயரணை 5) போல்ஜே ( )

14) அலையின் அரித்தல் செயல் காரணமாக உருவாகும் நிலவுருவம்.
1) சேற்றுநிலம் 2) கூலாங்கல் நாக்கு 3) மணல்மேடுகள்
4) ஓங்கல் 5) தொம்போல்லா ( )

15) குறிப்பிட்ட ஓரிடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் நிகழும் வளிமண்டல செயற்பாடு.
1) காலநிலை எனப்படும் 2) ஈரப்பதன் எனப்படும்.
3) வானிலை எனப்படும் 4) வளி அமுக்கம் எனப்படும்.
5) வெப்ப நிலையின் கிடைப்பரம்பல் எனப்படும். ( )

16) மெக்சிக்கோ குடா, மேற்கிந்தியத் தீவுகள், கரீபியன் கடல் போன்ற பகுதிகளில் உருவாகும் அயனப் புயல்களுக்கு வழங்கப்படும் பெயர்.
1) தைப்பூன் 2) வில்லி வீல்ஸ் 3) ஹரிக்கேன்
4) பாகியஸ் 5) சூறாவளி ( )

17) கெப்பனின் காலநிலைப்பாகுபாட்டில் மத்திய தரைக் காலநிலைக்கு வழங்கப்படும் குறியீடு.
1) AF 2) Cs 3) Aw 4) Am 5) Cb ( )

18) இலங்கையில் தென்மேற் பருவக்காற்று வீசும் காலம்.
1) மே – செப்ரம்பர் 2) செப்ரம்பர் - பெப்ரவரி 3) நவம்பர் - டிசம்பர்
4) டிசம்பர் - ஜனவரி 5) ஜூன் - செப்ரம்பர் ( )

19) இலங்கையில் அதிகளவு மழைவீழ்ச்சியைப் பெற்றுக் கொள்ளும் பிரதேசம்.
1) வட்டவளை 2) மறிச்சுக்கட்டி 3) மாலிபொட
4) கந்தப்பொல 5) மீரிச ( )

20) உலகிலுள்ள குளிர்பாலைவனங்கள் உள்ளடங்கிய விடைத்தொகுதி.
1) கலிபோர்னியா, அரிசோனா, அட்டகாமா
2) கோபி, தக்லமக்லன், இடாகோ
3) சஹாரா, நமீபியா, தார்
4) மேற்கு அவுஸ்ரேலியா, தார், தக்லமக்லன்
5) நவேடா, துர்கிஸ்தான், கலஹாரி ( )

21) இலங்கையிலிருந்து ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையில் காணப்பட்டதாகக் கூறப்பட்ட வண்டு.
1) கெப்ரா பீற்றில் 2) கப்ரா பீற்றில் 3) சம்ரா பீற்றில்
4) மக்சா பீற்றில் 5) நவேதா பீற்றில் ( )

22) சனத்தொகையில் குடி அடர்த்தி என்பது.
1) ஒரு நாட்டில் சனத்தொகை பரம்பிக் காணப்படும் முறை.
2) ஒரு நாட்டில் சதுர கிலோமீற்றருக்குள் வாழும் சனத்தொகை.
3) ஒரு நாட்டிலுள்ள முதியோர் சனத்தொகை.
4) ஒரு நாட்டின் வாழும் பழங்குடி மக்களின் எண்ணிக்கை.
5) ஒரு நாட்டில் பெருமளவில் வாழும் மக்கள் இனம். ( )

23) சனத்தொகையில் இயற்கை வளர்ச்சி எனப்படுவது,
1) குடிவரவு, குடியகல்விற்கு இடையில் காணப்படும் வேறுபாடு.
2) பிறப்பு விகிதத்திற்கும் இறப்பு விகிதத்திற்கும் இடையில் காணப்படும் வேறுபாடு.
3) பிறப்பு விகிதத்திற்கும் குடியகல்விற்கும் இடையில் காணப்படும் வேறுபாடு.
4) குடி வரவிற்கும், இறப்பு விகிதத்திற்கும் இடையில் காணப்படும் வேறுபாடு.
5) குடிவரவிற்கும், பிறப்பு விகிதத்திற்கும் இடையில் காணப்படும் வேறுபாடு. ( )

24) கிழக்கு ஆசியப் பிரதேசத்தில் இலத்திரனியல் கைத்தொழிலில் ஆதிக்கத்தினைச் செலுத்தி வரும் நாடு.
1) ஜப்பான் 2) தைவான் 3) சீனா
4) சிங்கப்பூர் 5) தாய்லாந்து ( )

agaram.lk

25) வட அமெரிக்க பிரதேசத்தில் வசிக்கும் கோத்திரமக்கள் கூட்டம்.
1) அபாச்சே 2) அயினுஸ் 3) செவ்வந்தியர்
4) பிக்மி 5) அபோரிஜினிஸ் ( )

26) இலங்கையிலுள்ள உல்லாச நகரம்.
1) ஸ்ரீஜெயவர்த்தனபுர 2) கொழும்பு 3) திவிலுப்பிட்டிய
4) ஹோமாகம 5) ஹிக்கடுவ ( )

27) பாலும் பால் சார்ந்த உணவுகளின் வர்த்தகத்தில் பிரபல்யமான பல்தேசியக் கம்பனி.
1) மொன்சென்டோ 2) நெஸ்லே 3) லிப்ரன்
4) பன்ரா 5) டில்மாஸ் ( )

28) சீனாவில் இரும்புத்தாது பரம்பியுள்ள பிரதேசங்கள்.
1) பீஜிங் ஷங்காய் பகுதி 2) மஞ்சூரியா, பீஜிங் பகுதி
3) மஞ்சூரியா, சாங்கி பிரதேசம் 4) பீஜிங், சாங்கி பிரதேசம்
5) ஷங்காய், சாங்கி பிரதேசம் ( )

29) இலங்கையின் எப்பாவல பிரதேசத்தில் பரம்பியுள்ள கனியம்.
1) காரீயம் 2) இல்மனைட் 3) கனியமணல்
4) அபதைட் 5) இரத்தினக்கல் ( )

30) உலகில் பாரிய அளவில் இயற்கை வாயுவை உற்பத்தி செய்யும் நாடுகள்.
1) கனடா, ஐக்கிய அமெரிக்கா
2) நோர்வே, பின்லாந்து
3) ரஷ்யா, ஐக்கிய அமெரிக்கா
4) ரஷ்யா, ஐக்கிய இராச்சியம்
5) ஜேர்மனி, பிரான்ஸ் ( )

agaram.lk

## பகுதி – II

**அறிவுறுத்தல்கள் :-**

**முதலாம் வினாவுக்கும் 2ஆம் 3ஆம் வினாக்களிலிருந்து ஒரு வினாவையும் தெரிந்தெடுத்து இரண்டு வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

***1 : 50000 அளவுத் திட்டத்திலமைந்த இடவிளக்கப்படத்தின் ஒருபகுதி வழங்கப்பட்டுள்ளது. அதில் சமவுயரக் கோடுகளின் இடைவெளி 20 மீற்றரினால் குறித்துக் காட்டப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.***

குறிப்பு :-

- **படத்தின் மேல் விடைகள் எழுதப்படக் கூடாது.**
- **விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கதினையும் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.**
- **விடைத்தாளுடன் படத்தினை இணைக்க வேண்டாம்.**

*1.*

i. உமக்குத் தரப்பட்டுள்ள படத்தில் 1 – 4 வரை இலக்கமிடப்பட்டிருக்கும் விடயங்களைப் பெயரிடுக. (4 புள்ளிகள்)

ii. இப்பிரதேசத்தில் அதிகளவில் செய்கை பண்ணப்படும் பெருந்தோட்டப் பயிர் என்ன? (1 புள்ளி)

iii. இப்பிரதேசத்தில் செய்கை பண்ணப்படும் பிறபயிர்கள் இரண்டு தருக. (2 புள்ளி)

iv. நாற்பக்கல் A யில் காட்டப்பட்டுள்ள பிரதேசத்தின் சேவைகள் தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

v. படப்பகுதியில் காணப்படும் மானிடக் குடியிருப்புக்களின் பரம்பல் பற்றிக் கூறுக. (4 புள்ளிகள்)

vi. தரப்பட்ட பிரதேசத்தின் கிழக்கு அரைப்பகுதியின் நிலப்பயன்பாடு பற்றிச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

*2.*

i. புவியியல் தகவல் முறைமையொன்றின் (GIS) பிரதான உள்ளடக்கல் கூறுகளைத் தருக. (4 புள்ளிகள்)

ii. நவீன படவரைகலையியலின் பொது இயல்புகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

iii. பூகோள நிலைப்படுத்தல் முறைமை (GPS) தொழில்நுட்பத்தின் மூன்று பயன்பாடுகளை விளக்குக. (6 புள்ளிகள்)

iv. இலங்கையில் நவீன படவரை கலையியல் நுட்பமுறைகளை பயன்படுத்துவதில் ஏற்படுகின்ற சிக்கல்களைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

agaram.lk

3. இலங்கையின் யாழ்ப்பாண மாவட்டத்திற்குரிய வெப்பநிலை, மழைவீழ்ச்சிப் பரம்பல் அட்டவணை I இல் தரப்பட்டுள்ளது.

**யாழ் மாவட்ட வெப்பநிலை, மழைவீழ்ச்சிப் பரம்பல்.**

| மாதம் | வெப்பநிலை C | மழைவீழ்ச்சி mm |
|---|---|---|
| தை | 28 | 70 |
| மாசி | 29 | 30 |
| பங்குனி | 31 | 20 |
| சித்திரை | 33 | 50 |
| வைகாசி | 34 | 40 |
| ஆனி | 33 | 10 |
| ஆடி | 33 | 20 |
| ஆவணி | 33 | 30 |
| புரட்டாதி | 32 | 60 |
| ஐப்பசி | 31 | 230 |
| கார்த்திகை | 29 | 380 |
| மார்கழி | 28 | 260 |

**மூலம் :- வளிமண்டல திணைக்களம்**

i. அட்டவணை 1 இல் தரப்பட்ட தரவுகளைப் பயன்படுத்தி கோட்டு, நிரல் வரைபடம் ஒன்றினை அமைக்குக. (10 புள்ளிகள்)

ii. வரைபிலிருந்து யாழ்ப்பாண மாவட்டத்தின் வெப்பநிலைப் போக்குத் தொடர்பாக விளக்குக. (5 புள்ளிகள்)

iii. யாழ்ப்பாண மாவட்டத்தின் மழைவீழ்ச்சிப் போக்கு தொடர்பாக வரைபினூடாக விளக்குக. (5 புள்ளிகள்)

agaram.lk

FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

| juk;:- 13 (2018) | Gtpapay; - II | Neuk;:- %dW kzpj;jpahyq;fs; |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள்**

- **ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**

### பகுதி – I
### பௌதிகப் புவியியல்

**01)**

(i) a. மண் உருவாக்கக் காரணிகள் மூன்று தருக. *(3 புள்ளிகள்)*

b. மேலே குறிப்பிட்ட மண் உருவாக்கக் காரணிகளில் இரண்டினை விளக்குக. *(5 புள்ளிகள்)*

(ii) மண்ணின் குறுக்குப் பக்கப்பார்வையை வரைந்து அதன் படையமைப்புக்களைச் சுருக்கமாக விளக்குக. *(5 புள்ளிகள்)*

(iii) மண் அரித்தலைத் துரிதப்படுத்தும் மனித நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. *(5 புள்ளிகள்)*

(iv) இலங்கையில் செம்மஞ்சல் பொட்சோல் மண் பரப்பிக் காணப்படும்

a. மாவட்டம் ஒன்றும்

b. செய்கை பண்ணப்படும் பயிர் ஒன்றும் தருக. *(2 புள்ளிகள்)*

agaram.lk

**02)**

(i) ஈர நிலம் என்பதனை வரையறை செய்க. *(2 புள்ளிகள்)*

(ii) ஈர நிலங்கள் சூழல் தொகுதியின் நிலைத்திருப்பிற்குப் பங்களிப்புச் செய்யும் முறையை நான்கு காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(6 புள்ளிகள்)*

(iii) இலங்கையில் ஈரநிலங்களின் பொருளாதார முக்கியத்துவத்தினை மூன்று காரணிகளின் அடிப்படையில் விளக்குக. *(6 புள்ளிகள்)*

(iv) ஈர நிலங்களுக்கு ஏற்படும் மனித அச்சுறுத்தல்கள் நான்கினைக் குறிப்பிட்டு விளக்குக. *(6 புள்ளிகள்)*

**03)**

(i) பனிக்கட்டியாற்றரிப்பின் அரித்தல் செயற்பாடுகளைப் பெயரிடுக. *(3 புள்ளிகள்)*

(ii) மலைப் பனிக்கட்டியாற்றரிப்பினால் உருவாக்கப்படும் மூன்று படிதல் நிலவுருவங்களை விளக்குக. (6 புள்ளிகள்)

(iii) மலைப் பனிக்கட்டியாற்றரிப்பினால் உருவாகும் மூன்று அரித்தல் நிலவுருவங்களை விளக்கப் படத்தின் உதவியுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) பனிக் கட்டியாற்றரிப்பினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களை இரு காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

(5 புள்ளிகள்)

**04)**

(i) "காலநிலை மாற்றம்" வரைவிலக்கணப்படுத்துக. (2 புள்ளிகள்)

(ii) காலநிலை மாற்றத்திற்குக் காரணமான மானிடக் காரணிகள் இரண்டினையும் பௌதிகக் காரணிகள் இரண்டினையும் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

(iii) காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகளை இழிவளவாக்குவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூன்று குறிப்பிட்டு விபரிக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி – I

## மானிடப் புவியியல்




agaram.lk

**05)** குடித்தொகையின் வயதுக் கட்டமைப்பு $A, B, C$ ஆகிய வரைபடங்கள் மூலம் எடுத்துக் காட்டப்படுகின்றன.

(i) $A, B$ ஆகிய வயதுக் கட்டமைப்பு கூம்பினை அவதானித்து அவற்றில் இனங்காணக் கூடிய முனைப்பான அம்சங்களைக் குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

(ii) இலங்கையில் முதியோர் தொகை அதிகரிப்பதற்கான காரணங்களைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

(iii) வயதுக் கட்டமைப்பு $C$ யின் போக்கில் காணப்படும் மாற்றங்களுக்கான காரணங்களை விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) வயதுக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக ஏற்படும் சமூக, பொருளாதார விளைவுகளைச் சுருக்கமாக விபரிக்குக. (5 புள்ளிகள்)

**06)**

(i) மரபணுத் தொழில்நுட்பம் என்றால் என்ன? (2 புள்ளிகள்)

(ii) மரபணுத் தொழில்நுட்பத்தின் அனுகூலங்கள் மூன்று குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

(iii) மரபணுத் தொழில்நுட்பத்தினால் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்களைச் சுருக்கமாக விளக்குக . (6 புள்ளிகள்)

(iv) இலங்கையில் நெற்செய்கையின் பரப்பளவை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளை விபரிக்குக. (6 புள்ளிகள்)

**07)**

(i) இலங்கையில் உள்ள காரிய உற்பத்திச் சுரங்கங்கள் மூன்றின் பெயரைத் தருக. (3 புள்ளிகள்)

(ii) காரியத்தினை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) காரிய அகழ்வு கைத்தொழிலின் புதிய போக்குகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) சுரங்க அகழ்வு கைத்தொழில் எதிர்கொள்கின்ற இடர்களைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

agaram.lk

**08)**

(i) மோட்டார் வாகன உற்பத்திக் கைத்தொழிலில் ஈடுபடும் ஆசிய நாடுகள் மூன்று தருக. (2 புள்ளிகள்)

(ii) மோட்டார் வாகனக் கைத்தொழிலை ஓரிடப்படுத்தும் காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

(iii) மோட்டார் வாகனக் கைத்தொழிலின் நவீன போக்குகளை விளக்குக. (6 புள்ளிகள்)

(iv) இலங்கையின் ஆடைக் கைத்தொழிலின் சமகால மாற்றங்களை விளக்குக. (6 புள்ளிகள்)




SCALE 1:50 000

# SRI LANKA 1 : 50,000 - SHEET No. 31 - ANURADHAPURA (PART OF)




agaram.lk